 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025**

**General Certificate of Education (Ord. Level) 3rd Term Exam – 2025**

| விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் | Grade 11 | T | 81 | மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக**.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. *1* தொடக்கம் *40* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.
5. **கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது**

## பகுதி 1

1. பண்டைய இலங்கையில் நிலவிய தன்னிறைவுப்பொருளாதாரம், வர்த்தக பொருளாதாரமாக மாற்றமடைய ஏதுவாக அமைந்த பயிர்த்தொகுதி
   1. தேயிலை, கோப்பி, சிங்கோனா
   2. உருளைக்கிழங்கு, தேயிலை, கோப்பி
   3. தேயிலை, இறப்பர், தென்னை
   4. கோப்பி, நெல், கொக்கோ

2. இலங்கையில் சிறுபோகத்திற்கு பிரதானமாக மழை கிடைப்பது,
   1. முதலாம் இடைப்பருவ மழை
   2. வடகிழக்கு பருவபெயர்ச்சி மழை
   3. தென்மேற்கு பருவபெயர்ச்சி மழை
   4. இரண்டாம் இடைப்பருவ மழை

3. பூக்கள் உருவாக குறைந்த வெப்பநிலை தேவைப்படும் பயிர்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?
   1. மிளகாய், கத்தரி, பயிற்றை
   2. கரட், கோவா, பீற்றூட்
   3. கரட், லீக்ஸ், கரும்பு
   4. கோவா, கரட், தென்னை

4. பின்வரும் பாறைகளில் ஒரு தீப்பாறையாக அமைவது,
   1. கிரணைட்
   2. மணற்கல்
   3. பளிங்குக்கல்
   4. ஷேல்

5. மண் பக்கப்பார்வையில் கழுவியகற்றப்படும் படை என அழைக்கப்படும் வலயமாக அமைவது
   1. படை B
   2. படை A
   3. படை R
   4. படை C

6. உயர்பாத்தி நாற்றுமேடையை தொற்றுநீக்குவதற்கு மிகச்சிறந்தது,
   1. சூரிய வெப்பத்தின் மூலம் தொற்றுநீக்கல்
   2. இரசாயன பதார்த்தம் மூலம் தொற்றுநீக்கல்
   3. கொதிநீர் மூலம் தொற்றுநீக்கல்
   4. எரித்தல் மூலம் தொற்றுநீக்கல்

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

7. பின்வரும் பயிர்த்தொகுதிகளுக்கான உதாரணங்களை காட்டும் சரியான விடை யாது?

| | | |
|---|---|---|
| 1. | அரிமரப்பயிர்கள் | தேக்கு, கிலுகிலுப்பை, தென்னை |
| 2. | எண்ணெய்ப் பயிர்கள் | எள், ஆமணக்கு, சூரியகாந்தி |
| 3. | வெட்டுப்பூக்கள் | சூரியகாந்தி, அந்தூரியம், பியூரேரியா |
| 4. | சுவைச்சரக்கு பயிர்கள் | மஞ்சள், கங்குன், டெஸ்மோடியம் |

8. துளிப்பாசனம் தொடர்பான சரியான கூற்றாக அமைவது
   1. தரையில் மண்ணரிப்பு அதிகரிக்கும்
   2. சாய்வுத்தன்மை கொண்ட காணிகளுக்கு பொருத்தமானதல்ல.
   3. நீர்ப்பாசன வினைத்திறன் அதிகமாகும்
   4. தாவரங்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவும்

9. பயிரொன்றின் பூத்தல், காய்த்தல் சந்தர்ப்பங்களின் போது அதிகமாக தேவைப்படும் போசணை மூலகம்
   1. நைதரசன் (N) 2. நாகம் (Zn) 3. கந்தகம் (S) 4. பொற்றாசியம் (K)

10. துணைப்பண்படுத்தலில் பயன்படுத்தப்படும் இயந்திரவலுவால் இயக்கப்படும் உபகரணங்கள்
   1. சுழல்கலப்பை, சாலிடுகருவி
   2. வட்டத்தட்டுகலப்பை, சுழல்கலப்பை
   3. ஹரோவகைகள், மண்வெட்டி
   4. சாலிடுகருவி, வட்டத்தட்டுகலப்பை

11. வளிமண்டலத்தில் சாரீரப்பதன் அதிகரிக்கும் போது
   1. தாவர நோய்த்தொற்றுக்கள் குறைவடையும்
   2. தண்டுத்துண்டங்களில் வேர்விடல் சிறப்பாக இடம்பெறும்
   3. காற்று மூலம் மகரந்தங்கள் பரவுதல் இலகுவாகும்
   4. நீர் மூலம் போசணை அகத்துறிஞ்சல் அதிகமாகும்

12. தற்காலத்தில் தென்னையை தாக்கிய பீடை
   1. தென்னோலை மயிர்கொட்டி
   2. வெண் ஈ
   3. தென்னை நீள்மூஞ்சி வண்டு
   4. தென்னங்கருவண்டு

13. A,B,C,D ஆகிய நான்கு மண்மாதிரியிலுள்ள மண் கூறுகளின் சார்நூற்று வீதங்களில் சரியானது

| | | வளி | நீர் | கனிப்பொருள் | சேதனப்பொருள் |
|---|---|---|---|---|---|
| 1. | A | 35% | 10% | 45% | 5% |
| 2. | B | 25% | 45% | 25% | 5% |
| 3. | C | 45% | 25% | 5% | 25% |
| 4. | D | 25% | 25% | 45% | 5% |

14. சொலனேசியா குடும்பப் பயிர்களுக்குப் பெரும்பாலும் ஏற்படும் ஒரு பற்றீரியா நோய்.
   1. அந்திரக்னோஸ் 2. வாடல் 3. இலைகள் பன்னிறப்படல் 4. நாற்றழுகல்

15. நெல் வர்க்கங்களை இனங்கான மிகப்பொருத்தமானது
   1. சிறுநா 2. தண்டு 3. வேர் 4. பூ

16. மும்மை சுப்பர் பொசுப்பேற்றில் அடங்கியுள்ள பொசுப்பரசு சதவீதம்
   1. 46% 2. 60% 3. 45% 4. 43%

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

17. நிரந்தர வாடல் நிலையில் மண்ணில் காணப்படும் மண்ணீர் வகையாக அமைவது
A. பருகு நீர் B. மயிர்த்துளை நீர் C. புவியீர்ப்பு நீர்
1. A,B மட்டும் 2. C மட்டும் 3. A மட்டும் 4. A,B,C மட்டும்

18. இயற்கை பதிய இனப்பெருக்க கட்டமைப்புக்களான வேர்த்தண்டுக்கிழங்கு, தண்டுக்கிழங்கு ஆகியவற்றுக்கான உதாரணங்கள் முறையே
1. இஞ்சி, உருளைக்கிழங்கு
2. உருளைக்கிழங்கு, மஞ்சள்
3. இன்னல, சின்னவெங்காயம்
4. மஞ்சள், சேம்பு

19. நான்கு மாத வயதுடைய விருத்தி செய்யப்பட்ட நெல்வர்க்கம்
1. Bg 300 2. Bw 300 3. $H_4$ 4. Bg 450

20. பொலித்தீன் கூடாரங்களை அமைக்கும் போது வெப்பநிலை அதிகரிப்பை கட்டுப்படுத்த பின்வரும் உத்திகள் பயன்படுத்தப்படும்.
A- கூரையின் உச்சிப்பகுதி இரண்டு அடுக்குகளாக தயாரிக்கப்படும்
B- பக்கவாட்டில் விசிறிகள் பொருத்தப்படல்
C- கூடாரம் முழுவதும் வலைக்கு பதிலாக பொலித்தீனால் மறைப்பிடல்
மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் சரியானது,
1. B,C மட்டும் 2. A,C மட்டும் 3. A,B மட்டும் 4. A,B,C மட்டும்

21. செங்கபில மண் அதிகமாக காணப்படும் மாவட்டமாக அமைவது
1. அநுராதபுரம் 2. கேகாலை 3. மாத்தளை 4. பதுளை

22. காப்பு பயிர்ச்செய்கை தொடர்பான சரியான கூற்றை தெரிவு செய்க.
1. இதன் மூலம் பசளை மற்றும் சக்தி வலு ஆகியவற்றுக்கான செலவைக் குறைக்கலாம்.
2. ஏனைய பயிர்ச்செய்கை முறைகளை விட மண்ணரிப்பு குறைவாகும்.
3. ஒரு உற்பத்தியின் பக்கவிளைவுகளை மற்றைய உற்பத்திக்கான உள்ளீடுகளாக பயன்படுத்தப்படல்.
4. மண், நீர், போசணை, உயிர்ப்பல்வகைமை ஆகியன பாதுகாக்கப்படும் வகையில் குறைவான உள்ளீடுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.

23. பப்பாசி செய்கையில் இனிப்புச்சுவையை அதிகரிக்க மிகப்பொருத்தமான வெப்பநிலை
1. $22^0c - 30^0c$ 2. $28^0c - 35^0c$ 3. $25^0c - 40^0c$ 4. $20^0c - 28^0c$

24. இரண்டு வயதுப் பிள்ளையொருவரின் வயிறு முன்நோக்கித் தள்ளியவாறும் தோலில் வெடிப்புக்களும் கைகள், கால்கள், முகம் ஆகியன வீங்கியும் காணப்பட்டன. இந்த நோய் நிலைமையாக அமையத்தக்கது.
1. குருதிச்சோகை 2. மரஸ்மஸ் 3. குவாசியக்கோர் 4. ஒவ்வாமை

25. மனித போசணையில் பின்வருவனவற்றில் எந்தச் செயன்முறைக்கு பிரதானமாக காபோவைதரேற்று உணவுகள் அவசியமாகின்றன.
1. பிள்ளைகளில் உடல்வளர்ச்சி ஏற்படல்
2. தேய்வுற்ற உடல் இழையங்களை புதுப்பித்தல்
3. அன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையான சக்தியை வழங்கல்
4. பல்வேறு நோய்களில் இருந்து பாதுகாத்தல்.

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

26. பின்வரும் உணவுகளில் உணவு நச்சுத்தன்மையை ஏற்படுத்தக்கூடிய அதிஆபத்தைக்கொண்ட உணவு வகைகள்
   1. பூசணி, புடோல், முள்ளங்கி
   2. பயறு, கடலை, மீன்
   3. பப்பாசி, மாங்காய், முட்டை
   4. கோழிஇறைச்சி, பால் முட்டை

27. நாற்றுக்களுக்கு இடையேயான அதிக இடைவெளி தேவைப்படும் பயிர் ஸ்தாபிப்புக்காக, தனி நடுகைக்குழிகள் பயன்படுத்தப்படும். வாழை செய்கையில் சிபாரிசு செய்யப்பட்ட இடைவெளியானது,
   1. 3m ×3m   2. 8m ×8m   3. 4m ×4m   4. 6m ×6m

28. பிரதானமாக மண்ணிலிருந்து தாவரங்கள் பெற்றுக்கொள்ளும் போசணை மூலகமாக அமைவது,
   1. பொற்றாசியம்   2. ஒட்சிசன்   3. ஐதரசன்   4. காபன்

29. ஒருவித்திலைத் தாவர வித்தில் முளைத்தலுக்கு தேவையான உணவு சேமிக்கப்பட்டிருப்பது.
   1. முளை தண்டில்   2. சுற்றுக்கனியத்தில்   3. வித்தகவிழையத்தில்   4. வித்திலைகளில்

30. மரக்கறி நாற்றுமேடைப் பாத்திகளுக்காக சிபாரிசு செய்யப்படும் 1:1 எனும் விகிதத்தில் தயாரிக்கப்படும். நாற்று மேடை ஊடகக் கலவையில் அடங்கியுள்ள கூறுகள்
   1. உமி, தும்புத்தூள்
   2. மேல்மண், கூட்டெரு
   3. தும்புத்தூள், மேல்மண்
   4. உடன்சாணம், மேல்மண்

31. உருவில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தின் மூலம் அளவிடப்படுவது



   1. ஒளியின் தரம்
   2. ஈரப்பதன்
   3. ஒளிக்கால அளவு
   4. ஒளிச்செறிவு

32. நடுகைக்குப் பொருத்தமான வித்துக்களில் காணப்பட வேண்டிய இனத்தூய்மை என்பதனால் கருதப்படுவது
   1. பிறபொருள் கலந்திருத்தல்
   2. ஒருபேத வித்துக்களாகவிருத்தல்
   3. களை வித்துக்களற்றிருத்தல்
   4. பதர் வித்துக்களற்றிருத்தல்

33. இலங்கையில் அதிகளவில் பயன்படுத்தப்படும் நிரந்தர பயிர்ச்செய்கை கட்டமைப்பு
   1. மரச்சலாகை இல்லம்   2. சூரிய இனப்பெருக்கி   3. கண்ணாடி இல்லம்   4. பொலித்தீன் கூடாரம்

34. சில களை வகைகள் மனித உணவாக பயன்படும். அவ்வாறு உணவாகக் கொள்ளக்கூடிய களைக் கூட்டமானது.
   1. சிறுபுல்லடி, துத்திரி, தடிச்சொல்லி
   2. கோரை, தயிர்வளை, தடிச்சொல்லி
   3. தயிர்வளை, தடிச்சொல்லி, மூக்கறைச்சி
   4. சிறுகோரை, சாறணை, முட்கீரை

35. குக்கர்பிற்றேசியே குடும்பப்பயிரைத்தாக்கும் பூரண உருமாற்றமுடைய பூச்சி பீடையாக அமைவது,
   1. எபிலக்னா   2. ஏபிட்டு   3. வெண் ஈ   4. நெல்மூட்டைப்பூச்சி,

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

36. உணவுப்பொதியினுள் அடங்கிய வளி அகற்றப்பட்டு மீண்டும் அதனுள் வளி செல்லாதவாறு முத்திரையிடப்பட்டிருப்பின் அது,
    1. கிருமியழித்து தயாரிக்கப்பட்ட பொதி
    2. அகச்சூழல் மிதப்படுத்தப்பட்ட பொதி
    3. வெற்றிடப்பொதி
    4. ரெற்றா பொதி

37. விலங்குகளுக்கு உணவாக பயன்படும் தேங்காய் பிண்ணாக்கு, எள்ளுப்பிண்ணாக்கில் அதிகம் அடங்கியுள்ள போசணைக்கூறு
    1. கொழுப்பு
    2. புரதம்
    3. காபோவைதரேற்று
    4. கனியுப்பு

38. மாடுகளில் கால்வாய் நோய் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறி யாது?
    1. வயிறூதல்
    2. பால்மடி சிவந்திருத்தல்
    3. அலைத்தாடையின் கீழ் வீக்கம் ஏற்படல்
    4. $40^0$C வரையான கடும் காய்ச்சல் ஏற்படும்

39. ஒருநாள் வயதுப்பருவ புரோயிலர்க் கோழிக்குஞ்சுகளை விற்பனை செய்யும் போது எந்தநோய் வராமல் தடுப்பதற்கென அவற்றுக்கு கட்டாயம் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்
    1. ரணிக்கெற்
    2. புல்லோரம்
    3. கம்போரா
    4. சளிச்சுரம்

40. தற்போது இலங்கையில் அதிகளவில் பயன்படுத்தப்படும் கோழி வளர்ப்பு முறை எது?
    1. கனகூள முறை
    2. கூடுமுறை
    3. தட்டு முறை
    4. அரைத்தீவிர முறை

(1×40 = 40 புள்ளிகள்)

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

## பகுதி 11

**முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்குக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

1) விவசாய முயற்சியிலிருந்து அதிக அனுகூலங்களை பெற்று கொள்வதற்கு நிலத்தின் நீடித்த நிலைப்பு, கால்நடைவளர்ப்பு, பயிர்ச்செய்கை முகாமைத்துவ நடைமுறைகள் பற்றி அதிக கவனம் செலுத்தவேண்டும்.

1.
   a) விவசாயத்தின் இரு பெரும் பிரிவுகளைக் குறிப்பிடுக.
   b) மட்காப்பிற்கென பயன்படுத்தப்படும் செயன்முறைகள் 2 தருக?

2.
   a) பயிர் நிலங்களில் இடைப்பண்படுத்தலை மேற்கொள்வதற்கு பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் 2 தருக?
   b) வரம்புசால் பாத்தியில் பயிரிட மிகப்பொருத்தமான பயிர்கள் 2 தருக?

3.
   a) பாலுக்காக வளர்க்கப்படும் எருமை மாட்டு வர்க்கங்கள் 2 தருக?
   b) கனகூள முறையில் கோழி வளர்ப்பை மேற்கொள்வதன் அனுகூலங்கள் 2 தருக?

4. பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் நீர் முகாமைத்துவ உபாயங்கள் மூன்றினையும் குறிப்பிடுக.

5. பயிர்களில் ஏற்படும் நைதரசன் குறைபாட்டை நீக்க இடப்படும் இரசாயன பசளைகள் 2 தருக.

6. பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான முறையை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் 4 தருக?

7.
   a) வருடத்தின் எக்காலத்திலும் அறுவடையை தரக்கூடிய 2 பழப்பயிர்களை குறிப்பிடுக.
   b) கோரை, ஆனையறுகு போன்ற களைகளை கட்டுப்படுத்த உகந்த இரசாயனம் அல்லாத முறைகள் 2 தருக?

8. பாரம்பரிய நெற்பேதங்களுடன் ஒப்பிடுகையில் திருத்திய நெற்பேதங்கள் கொண்டுள்ள இயல்புகள் 2 தருக.

9.
   a) பயிர்ச்செய்கையில் உள்ள பீடை குடித்தொகையை குறைக்க பயன்பத்தக்கூடிய பொறிகள் 2 தருக.
   b) காற்று வீசும் காலத்தில் எவ்வாறு பீடைநாசினி விசிற வேண்டும்?

10. களைகளின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

2) சிறப்பான சூழலில் வளர்க்கப்படும் பயிர்களிலிருந்து தரமான அதிக விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியும்.

1.
   a) ஆளுகை நிபந்தனையின் கீழான பயிர்ச்செய்கையின் முக்கியத்துவம் 2 தருக?
   b) பயிர்களுக்கு தேவையான உத்தம சூழல் நிலைமைகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் தற்காலிக கட்டமைப்புக்கள் 2 தருக?

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

2.
   a) பசுமை இல்லத்தினுள் ஆளுகை செய்யப்படும் சூழற்காரணிகள் 2 தருக?
   b) அவ் சூழல் காரணிகளை அளவிட பயன்படும் உபகரணங்களை 2 தருக?

3. மண்ணின்றிய பயிர்ச்செய்கையின் போது பயன்படுத்தப்படும் நடுகை ஊடகங்கள் 2 தருக?

(2×5=10 புள்ளிகள்)

3) பயிர்களில் இருந்து அதிக விளைச்சலை பெற்றுக்கொள்வதற்கு சிறப்பான மண்முகாமை முக்கியமானதாகும்.

1.
   a) மண் இழையமைப்பின் விவசாய முக்கியத்துவங்கள் 2 தருக.
   b) பயிர்ச்செய்கைக்கு உகந்த மண்கட்டமைப்பு வகை யாது?

2.
   a) இலங்கையில் அதிகளவில் பரம்பியுள்ள செம்மஞ்சட்பொட்சோல் மண் காணப்படும் மாவட்டங்கள் 2 தருக.
   b) மண்ணின் கட்டமைப்பை பாதுகாக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் 2 தருக?

3. மண்ணரிப்பானது மூன்று படிமுறைகளில் நிகழும். அவ் படிமுறைகளை குறிப்பிடுக?

(2×5=10 புள்ளிகள்)

4) உணவு நற்காப்பு மூலம் மேலதிக உணவுகளை எதிர்கால பயன்பாட்டிற்கென பாதுகாத்துக்கொள்ள முடியும்.

1.
   a) உணவுகளை உலர்த்தும் முறைகள் இரண்டைப் பெயரிட்டு அவற்றுக்கான உதாரணங்களையும் குறிப்பிடுக.
   b) இலற்றிக்கமில நொதித்தல் முறை மூலம் நற்காப்புச்செய்யப்படும் உணவுகள் 2 தருக?

2.
   a) உணவுபழுதடைதலில் செல்வாக்குச்செலுத்தும் பௌதிக காரணிகள் இரண்டைப்பெயரிடுக.
   b) உணவு நஞ்சாதலினால் உடலில் ஏற்படும் நோயறிகுறிகள் 4 தருக.

3. சமூகத்தில் போசணைக்குறைபாட்டால் பாதிக்கப்படும் இரு தொகுதியினரைக் குறிப்பிடுக.

(2×5=10 புள்ளிகள்)

5) பயிர்ச்செய்கையின் போது காற்றுக்குரிய சூழல், மண்சூழல் ஆகியன தொடர்பாக கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும்.

1.
   a) பயிர்ச்செய்கையில் ஒளி செல்வாக்கு செலுத்தும் விதங்களை குறிப்பிடுக.
   b) இலங்கைக்கு மழை கிடைக்கும் பிரதான முறைகள் மூன்றைக் குறிப்பிடுக.

2.
   a) குத்துயர வேறுபாட்டின் அடிப்படையில் இலங்கை பிரிக்கப்பட்டுள்ள காலநிலை வலயங்களை குறிப்பிடுக.
   b) சாரீரப்பதன், காற்றின் வேகம் ஆகிய காலநிலைக்காரணிகளை அளவிடப்பயன்படும் உபகரணங்களை தருக?


3. செம்மையான தரவுகளை பெற மழைமானியை நிறுவும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 2 தருக.

(2×5=10 புள்ளிகள்)

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

6) பயிர்ச்செய்கையின் பலன்தரு தன்மையை குறைவடைய செய்யும் மிக முக்கியமான காரணியாக பீடைகள் விளங்குகின்றன.

1. A



நோய்க்காரணி B

a) தாவரமொன்றில் நோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள் A,B ஐ பெயரிடுக.

b) ஆக்கிரமிப்புக்களைகள் இரண்டைக் குறிப்பீடுக.

2.

a) குக்கர்பிற்றேசியே குடும்ப பயிர்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் பூரண உருமாற்றத்தை கொண்ட பீடையொன்றை பெயரிடுக.

b) மேற்குறித்த பீடையை கட்டுப்படுத்துவதற்கான இரசாயனம் அல்லாத முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

3. உருவவியல் அடிப்படையில் களைகளை வகைப்படுத்தும் முறையை குறிப்பிட்டு ஒவ்வோர் உதாரணம் வீதம் தருக?

(2×5=10 புள்ளிகள்)

7) மனிதருக்கு இன்றியமையாத பிரதான போசணைக்கூறான புரதத்தைப் பெற்றுக்கொள்ள கால்நடை வளர்ப்பு மிக முக்கியமானதாகும்.

1.

a) இலங்கையில் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவங்கள் 2 தருக.

b) கால்நடைக்கான உணவுப்பங்கீட்டின் போது காபோவைதரேற்றை பெற்றுக்கொள்ள பயன்படுத்தக்கூடிய பதார்த்தங்கள் இரண்டைக்குறிப்பிடுக.

2.

a) ஒருவரின் நாளாந்த உணவுத்தேவையில் அடங்கியிருக்கவேண்டிய புரதத்தின் அளவினை சதவீதத்தில் தருக.

b) புரதக்கலோரி குறைபோசணை நீண்டகாலம் காணப்படுமானால் ஏற்படும் நோய்நிலைமைகள் 2 தருக.

3. கனகூள முறை கோழி வளர்ப்புக்கென கனகூளத்தை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் 4 தருக.

(2×5=10 புள்ளிகள்)